**அக்டோபர் - 25**

**"நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்குக் கர்த்தர் துணை."**

**- 2நாளா 19 : 11.**

யாருக்காவது செய்வதற்கென்று ஒரு வேலை இருக்குமானால் பயப்படாதிருப்பானாக, பிரியப்படாத வேலைகளை பட்சமான வகையில் நீதியும், அன்பும் செய்ய நாடும் போது, மனிதருக்கு நாம் பயப்படாதிருப்போமாக. ஆனால் கர்த்தருக்குப் பயந்து அவரையே பிரியப்படுத்த மனவுறுதியுடன் இருப்போமாக. உலகம் தன்னுடைய போராட்டத்தைப் போராடட்டும். கர்த்தர் மேற்பார்வையிடுவார். பயன்கள் மகிமையுள்ளதாக இருக்கும். புது சந்ததிக்குரியவர்களாகிய நாம் இவ்வுலகத்திற்குரியதல்லாத புதுராஜ்யத்துக்கு உரியவர்களாகிய நாம், மாம்ச சம்பந்தமான ஆயுதத்தை உபயோகிக்காமல், ஆவியின் பட்டயத்தை உபயோகிக்கிற நாம், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோமாக. நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற மகிமையான காரியங்களைப் பற்றிக் கொண்டிருப்போமாக. நாமே நிற்பது மட்டுமல்லாமல், அதே ஆவியுடையவர்களும் ஒரே ஆவியின் சைனியப்பிரிவிலே உள்ள அங்கத்தினர்களுமான எல்லோரும் நமது தலைவரும், இரட்சிப்பின் அதிபதியுமானவரில் பூரணமாக நிற்க அவர்களுக்கு உதவி செய்வோமாக. **- Z ’04, 207, 205 (R 3393)**

திடமனதாயிருந்து காரியத்தை நடத்துவது என்பது நாம் நம்முடைய கஷ்டங்களையும், வேலைகளையும், அல்லது சத்துருக்களையும் குறைவாய் மதிக்கிறோம் என்று அர்த்தம் கொள்ளுகிறதில்லை. நாம் நம்முடைய கிறிஸ்தவ போராட்டம் சம்பந்தமாகவுள்ள எல்லாவற்றையும் தெளிந்த புத்தியோடு மதிப்பிடும்படியும், ஆகையால் நமக்கு எதிராகவுள்ளவைகளைவிட நமக்காகவுள்ளவைகள் சிறந்தவைகள் என்று தெளிவாய் அறிந்து கொள்ளும்படியும் அது அர்த்தங்கொள்ளுகிறது. வெற்றிக்காக நம்பிக்கை நிறைந்த இருதயத்தோடு, இது எல்லா ஆபத்துக்களையும், தைரியமாய் எதிர்த்து நிற்க நம்மை சாத்தியமாக்கும். நம்முடைய தைரியத்தோடு இருதயத்தின் நன்மையை சேர்த்துக் கொண்டோமானால், தேவனை நேசிக்கிறவர்களுக்கு சகலமும், நன்மைக்கேதுவாய் நடக்க ஏற்பாடு செய்கிற அவர், நம்முடைய மனுஷீக குறைவுகளுக்காகவும், தவறுதலுக்காகவும், பலவீனத்துக்காகவும், முழுவளர்ச்சியடையாத நம்முடைய புது இருதயம், மனது, சித்தம் இவைகளுக்காகவும் ஈடாக நமக்கு இரக்கத்தையும், ஏற்ற எல்லா சமயத்திலும் சகாயஞ் செய்யும் கிருபையையும் கொடுப்பார். **- P ’34, 143.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோசு 1:1-9; 2நாளா 15:7,8; நீதி 28:1; எசே 2:6; 3:9; 1கொரி 16:13; பிலி 1:27,28; 2தீமோ 1:7; ஆதி 22:1-14; நியா 6:25-31; எஸ்றா 8:22,23; 5:11; தானி 3:16-18; 6:10; அப் 4:19; 5:29; வெளி 2:10.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 71 (R 5413).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் இந்த வசனம் எனக்கு என்ன செய்தது? எப்படி? பலன் என்ன?**